# காலத்தை வென்ற வடு!

சாதிகளை உருவாக்கி
சாத்திரங்கள் செழித்தோங்க
ஏற்ற தாழ்வுகள்
இமயமாய் உயர்ந்துநிற்க
வித்தட்டு வளர்த்தவர்கள்
நம்மவர்கள் 'நல்லவர்கள்'.
அந்நியர் வருகைக்கு
நாம்படைத்த வேற்றுமைகள்
ஆரத்தி எடுத்ததனால்
அவனுக்கு அடிமையாய்
நாமாகிப் போகினோம்
சுரண்டிய அவன்கூட
நம்மை இணைத்திடும்
பாலமாய் நின்றதனால்
அண்ணல் காந்தியின்
தலைமைக்கு அடிபணிந்தோம்.
அதன்விளைவே நாம்பெற்ற
விடுதலை வெற்றியும
எண்ணற்ற வளர்ச்சிகளும்.
இன்னும் சா'தீய'க் கொடுமைகள்
இந்நாட்டில் இருப்பதற்கு
வேரறுக்க முடியாமல்
விருட்சமாய் நிற்கின்ற
சாதியெனும் சகதிகளே.
சாதியைச் சுமந்துநிற்கும்
அதிகாரிகள் அரசியல்வாதிகள்
எத்தனை மகான்கள்வந்து
இவர்களைத் திருத்திடுவார்?
ஆறறிவைப் புறக்கணித்தால்
அழியாது சாதிகளும்!
அன்று சாதிகளை உருவாக்கியவர்களை
இன்று தண்டிக்க முடியாது.
இன்னும் சாதிகளுக்கு உரமூட்டும்
சல்லியரைக் காப்பதெது?